# 1. கலைஞர் வீட்டு வசதித் திட்டம்

தமிழ்நாட்டின் ஊரகப்பகுதிகளில் உள்ள அனைத்துக் குடிசை வீடுகளையும் மாற்றி, 6 ஆண்டுகளில் நிலையான கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தர, 'கலைஞர் வீட்டு வசதித் திட்டம்' என்னும் புதுமையான திட்டத்தை இந்த அரசு அறிவித்துள்ளது. இதன்படி, 2016ல் நாட்டிலேயே 'குடிசைகள் இல்லாத முதல் மாநிலம்' என்ற பெருமையை தமிழ்நாடு பெறும். இத்திட்டத்தின் மொத்தச் செலவினத்தையும் தமிழக அரசே ஏற்கும்.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 2010–11ஆம் ஆண்டில் 3 இலட்சம் குடிசை வீடுகள் – வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை 60 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் – 1,800 கோடி ரூபாய் செலவில் நிலையான கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தரப்படும்.

இத்திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3.3.2010 அன்று திருச்சிராப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் அனைத்துக் குடிசைகளுக்கான கணக்கெடுப்பு 29.3.2010 அன்று



துவக்கப்பட்டு விரைவாக நடைபெற்று வருகிறது. 20.4.2010 வரை ஏறத்தாழ 14 இலட்சத்து 25 ஆயிரம் குடிசைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில், 7,647ல் கணக்கெடுப்புப் பணி முடிவு பெற்றுள்ளது; எஞ்சியுள்ள கிராம ஊராட்சிகளில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் பதவியிடங்கள் புதிதாக உருவாக்கப்படும்.

## 2. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 2010–11ஆம் நிதியாண்டில் சுமார் ஒரு லட்சத்து 2 ஆயிரம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும். இதற்காக தமிழக அரசு சுமார் 268 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும். புதிய வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை 55 ஆயிரம் ரூபாயிலிருந்து, 60 ஆயிரம் ரூபாயாக இந்த நிதியாண்டு முதல் உயர்த்தி வழங்கப்படும்.



## 3. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2008–09ஆம் ஆண்டில், 95 புதிய சமத்துவபுரங்கள் மூன்று ஆண்டுகளில் அமைக்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, 2008–09ஆம் ஆண்டில் 29 சமத்துவபுரங்களும், 2009–10ஆம் ஆண்டில் 30 சமத்துவபுரங்களும் அமைக்கப்பட்டன. அதே போல 2010–11ஆம் ஆண்டில் 36 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படும். இதற்காக இந்த ஆண்டில் 75 கோடி ரூபாய் நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 4. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் சிறப்பான செயல்பாடுகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது என்று அண்மையில் உச்சநீதிமன்றமே பாராட்டியுள்ளது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இத்திட்டத்தினை தேசிய அளவில் சிறப்பாகச் செயல்படுத்திய திண்டுக்கல், கடலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு பிப்ரவரி 2009லும், விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு பிப்ரவரி 2010லும் சிறப்பு விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

2005–06ல் வெறும் 3 கோடி ரூபாயாக இருந்த இத்திட்டச் செலவினம், 2006–07ல் 152 கோடி ரூபாயாகவும், 2007–08ல் 516 கோடி ரூபாயாகவும், 2008–09ல் 1,005 கோடி ரூபாயாகவும் உயர்ந்து, 2009–10ல் 1,676 கோடி ரூபாயை அடைந்துள்ளது. இத்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து 31.3.2010 வரை மொத்தம் 3,352 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2010–11ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 2,684 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

2010–11ஆம் ஆண்டில் 2,514 கிராம ஊராட்சிகளில் சுமார் 508 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

கடந்த 4 ஆண்டுகளாக சீரிய முறையில் நடைபெற்று வரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இந்த ஆண்டுடன் நிறைவு பெறும். இந்த நிதியாண்டின் இறுதியில், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு நூலகம், ஒரு விளையாட்டு மையம், ஒரு நீர் சேகரிப்பு அமைப்பு, ஒரு மேம்படுத்தப்பட்ட மயானம், குடிநீர் வசதிப் பணிகள் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டு இருக்கும்.

இந்தியாவிலேயே ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் நூலகம், விளையாட்டு மையம் அமைந்துள்ள ஒரே மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெறும்.



## 6. ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களான சாலைகள், ஏரிகள், குளங்கள், குடிநீர் வசதித் திட்டங்கள், கட்டடங்கள் ஆகியவற்றைத் தங்களுடைய பொது நிதியிலிருந்து பராமரிக்கும் பொறுப்பு அந்தந்த உள்ளாட்சி அமைப்பையே சாரும். இவற்றில் சாலைகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றைப் பராமரிக்க இந்த ஊரக உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முயற்சிகளுக்குத் துணையாக பல்வேறு அரசுத் திட்டங்கள் உள்ளன. ஆயினும், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட சமுதாயக் கூடங்கள், சத்துணவு மையங்கள், அங்கன்வாடி மையங்கள், நியாயவிலைக் கடைகள், பால் கொள்முதல் நிலையங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், நூலகங்கள், இடுகாடு/சுடுகாடு மேடைகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் இது போன்ற கட்டடங்கள் போதிய பராமரிப்பு இன்றி பழுதுபட்டு முழுமையான பயன்பாட்டிற்குத் தகுதியில்லாத நிலையில் உள்ளன. இவற்றைத் தவிர, ஊர்ப்புற விளையாட்டு மையங்களும் பராமரிக்கப்பட வேண்டியுள்ளன. இவற்றைப் பராமரிக்க ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும்

முயற்சிகளுக்குத் துணையாக, 2010–11ஆம் ஆண்டு ‘ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்’ என்ற ஒரு புதிய திட்டம் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.



## 7. கிராம சமுதாயக் கூடம் கட்டும் திட்டம்

தற்போது தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமுதாயக் கூடங்கள் உள்ளன. இருப்பினும், கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை எளியோரின் குடும்ப மங்கல விழாக்களுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடிய சமுதாயக் கூடங்களை அனைத்து ஊராட்சிகளிலும் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. இதனை நிறைவேற்றும் வகையில் ஏற்கனவே சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் இல்லாத அனைத்து ஊராட்சிகளிலும் தேவைக்கேற்ப, உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதிமூன்றாவது நிதி ஆணைய நிதியினைப் பயன்படுத்தி பொதுச் சமுதாயக் கூடங்கள் கட்டப்படும்.

## 8. 50,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் அனைவரும் சுய உதவிக் குழு இயக்கத்தில் சேர்ந்து பயனடையும் வகையில் சுமார் ஒரு இலட்சம் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மதிப்பிடப்பட்டு கடந்த 2009–10ஆம் ஆண்டில் 50 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதே போல 2010–11ஆம் ஆண்டிலும் 50 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.



## 9. 65,000 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி

தகுதி பெற்ற அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் வகையில் 2006-07ஆம் ஆண்டு முதல் கடந்த நான்காண்டுகளில் 2,81,883 சுய உதவிக் குழுக்களுக்கு 281 கோடியே 88 இலட்சம் ரூபாய் சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கடந்த ஆண்டில் உருவாக்கப்பட்ட குழுக்கள் மற்றும் சில விடுபட்டுப் போன குழுக்கள் பயன்பெறும் வகையில் 2010–11ஆம் ஆண்டில் 65 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு 65 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.

## 10. சுய உதவிக் குழுக்களுக்கு 3,000 கோடி ரூபாய் வங்கிக் கடன்

1989ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் 2006 ஆம் ஆண்டு வரை அதாவது 17 ஆண்டுகளில் சுமார் 1,765 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்பட்டது. தமிழக அரசு பெருமளவில் வழங்கிய சுழல் நிதி காரணமாகவும், வங்கிகளில் இருந்து கூடுதல் தொகையை கடனாகப் பெற அரசு எடுத்த சிறப்பு முயற்சிகளின் பலனாகவும், கடந்த நான்கு ஆண்டுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 6,342 கோடி ரூபாய் வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

2010–11ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 3,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.



## 11. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில், தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 1,000 கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. 2010–11ஆம் ஆண்டில் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற மேலும் 3,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும். இதற்காக இந்த ஆண்டு 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 12. நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதி அளவிலான கூட்டமைப்புகள்

சுய உதவிக்குழு இயக்கத்தின் வளர்ச்சிப் பாதையில் அடுத்த கட்டமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்புகள் சுய உதவிக் குழுக்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், குறைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு களமாகவும், ஒரு குழு தனியாக செய்ய முடியாதவற்றை இணைந்து சாதிக்கவும் வழி வகை செய்கிறது. இக்கூட்டமைப்புகள் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி ஜனநாயக முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையிலும் அதன் நிர்வாகம் மற்றும் நிலைத்த தன்மையினை மேம்படுத்தும் வகையிலும் ஊரகப் பகுதிகளில் படிப்படியாக தரமான வகையில் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன.

அதே போல நகர்ப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களும் பயன் பெறும் வகையில் 2010–11ஆம் ஆண்டில் நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்படும்.



## 13. 25,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி

தமிழ் நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பெரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக வேலை வாய்ப்புகள் அதிக அளவில் உருவாகியுள்ளன. இந்த வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குரிய தொழிற் பயிற்சியினை இளைஞர்களுக்கு அளிப்பது அவசியமாகிறது. கடந்த 2006-07ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இளைஞர் தொழிற் பயிற்சி திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 56,748 இளைஞர்கள் பல்வேறு வகையான தொழில்களில் பயிற்சி பெற்றனர்.

2010–11ஆம் ஆண்டில் மேலும் 25,000 இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படும். இதற்காக 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 14. ஊரக விளையாட்டுப் போட்டிகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் 2006–07 முதல் 2009–10ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்ட 10,104 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் கடந்த ஆண்டைப் போலவே நடப்பாண்டில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 மற்றும் பொங்கல் விடுமுறை நாட்களில் ஊரக விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடத்தப்படும். இதற்காக சுமார் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 15. ஊரக நூலகப் போட்டிகள்

ஊரகப் பகுதிகளில் பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட 5,074 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களில் 3 கோடியே 81 லட்சம் ரூபாய் செலவில் ஊரக நூலகப் போட்டிகள் நடத்தப்பட்டன. அதேபோல நடப்பாண்டிலும் 2006–07 முதல் 2009–10 வரை அமைக்கப்பட்டுள்ள 10,104 ஊரக நூலகங்களில் போட்டிகள் நடத்தப்படும். இதற்காக சுமார் 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 16. நபார்டு வங்கி நிதி உதவியுடன் சாலைகள் மேம்பாடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதோடு அக்கிராம ஊராட்சிகளுக்குச் செல்லும் சாலைகளையும் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தி தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டது.

அதன்படி, 2006–07, 2007–08, 2008–09ஆம் ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 7,829 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைப் பணிகள் 1,018 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோல, 2009–10ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில், நபார்டு வங்கி ஒப்புதலுக்குப் பின்னர் 2,159 கி.மீ. நீளமுள்ள ஊரக சாலைப் பணிகள், சுமார் 320 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.



## 17. பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தில் தார்ச்சாலைப் பணிகள்

2006–07, 2007–08, 2008–09 மற்றும் 2009–10ஆம் ஆண்டுகளில் பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தில் பழுதடைந்த ஊரகத் தார்ச் சாலைகளை சீரமைத்தது போலவே இந்த ஆண்டும் 103 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதடைந்த தார்ச்சாலைகள் மேம்படுத்தப்படும்.

## 18. நமக்கு நாமே திட்டம்

வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடுத்தி அவர்களது பங்களிப்போடு பணிகளை மேற்கொள்ளும் நமக்கு நாமே திட்டம், இந்த அரசால் மீண்டும் 2007–08ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களிடம் இத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில் 2010–11ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கென 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 19. ஊரகக் கட்டமைப்புத் திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்தவும், சிறு கட்டடங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், சிறுபாசனக் கண்மாய்களின் மடைகள், மதகுகள் மற்றும் கலிங்கல்களைப் புனரமைக்கவும் ஊரகக் கட்டமைப்புத் திட்டம் என்ற புதிய திட்டம் இந்த அரசால் 2008–09ஆம் ஆண்டு 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, 2009–10ஆம் ஆண்டில் 380 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது.

2010–2011ஆம் ஆண்டில் ஊரகக் கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள 380 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 20. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 29,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பெரும்பாலான பள்ளிகள் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றிப் பழுதடைந்த நிலையில் இருந்தன. இந்தப் பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பிக்க ஒரு சிறப்பான திட்டமாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் 2007–08ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளைப்போல, 2010–11ஆம் நிதியாண்டிலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் உள்ள சுமார் 5,000 பள்ளிகளிலும், பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள சுமார் 500 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் கட்டடங்கள் சீரமைக்கும் பணிகள் 85 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.



## 21. ஏலகிரியில் தாவரவியல் பூங்கா

ஊரகப் பகுதியைச் சார்ந்த ஏலகிரி புகழ் பெற்று வரும் சுற்றுலாத் தலமாக உருவாகி வருகிறது. அங்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் சுமார் 80 ஏக்கர் பரப்பளவில் தமிழகத்திலேயே மிகப் பெரிய தாவரவியல் பூங்கா உலகத் தரத்துடன் 20 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.